**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No. 25/2013 தேதி- 03.03.2026
(PW.1) – ஜோஸ் ஸ்டீபன்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை-**

1. 24.10.1997 பாகப்படி தான் நாங்கள் சொத்து அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். பாகப்பத்திரத்தில் நான் எத்தனையாவது கட்சி என்றால் நான்காவது கட்சி ஆவேன். பாகப்பத்திரத்தில் நான் ஐந்தாவது கட்சி என்றால் இல்லை, நான்காவது கட்சி ஆவேன். அந்த பாகப் பத்திரத்தின் படி எனக்கும், பிரதிவாதிக்கும் சர்வே எண்.707/10 என்றால் சரிதான். சர்வே எண்.707/10 ல் எத்தனை கண்டமாக பிரிக்கப்பட்டது என்றால் 9 கண்டமாக பிரிக்கப்பட்டது.

2. எனக்கு எத்தனையாவது கண்டம் ஒதுக்கப்பட்டது என்றால் நான்காவது கண்டம் ஒதுக்கப்பட்டது. எனக்கு கிடைத்த கண்டத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 11.400 சென்ட் ஆகும். என் கண்டத்தை தொட்டு தெற்கு பக்கம் தான் ஒன்பதாவது கண்டம் என்றால் சரிதான். ஒன்பதாவது கண்டத்தின் அகலம் எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. ஒன்பதாவது கண்டம் பொது வழியாக தான் பாகப்பத்திரத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. வழக்கு பட்டிகை சொத்தின் தெற்கு எல்கையில் பிளாட் எண்.8 வழிபாதை என்று காண்பித்துள்ளேன் என்றால் பிளாட் எண்.8 மற்றும் 9 பொது வழிபாதை என்று குறிப்பிட்டுள்ளேன். பிளாட் எண்.8 தான் குறிப்பிட்டு வழிபாதையாக காண்பித்துள்ளேன் என்றாலும், வேண்டுமென்றே பிளாட் எண்.9 ஐ வழிபாதையாக காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்குரையில் பத்தி 3 ல் பிளாட் எண்.7 மற்றும் 8 பற்றி மட்டும் தான் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், பிளாட் எண்.9 பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

4. இந்த வழக்கில் வழக்கிடை மனு எண்.81/2013 என்ற இடைக்கால தடை உத்தரவு கோரி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன மனுவில் இரு தரப்பு வாதத்தையும் கேட்டு 2013 ல் மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த உத்தரவில் இந்நீதிமன்றம்

ஒன்பதாவது கண்டத்தை நான் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்தேன் என்பதால் தான் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என்று சுட்டிக்காட்டி உள்ளது என்றால் சரியல்ல.

5. இவ்வழக்கின் பிரதிவாதி என்னையும், இன்னொரு சகோதரனையும் கட்சியாக சேர்த்து இந்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் நினைவில் இல்லை. அந்த வழக்கு அசல் வழக்கு எண்.123/2003 என்ற வழக்கிலும் பிளாட் எண்.8 மற்றும் 9 தான் வழக்கு சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குரையிலோ, என் முதல் விசாரணையிலோ இதற்கு முன்பு நடந்த அசல் வழக்கு எண்.123/2003 மற்றும் 142/2007 மற்றும் இதர மேல்முறையீடுகளை பற்றி எவ்வித குறிப்புகளும் குறிப்பிடவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

6. அசல் வழக்கு எண்.142/2007 என்ற வழக்கின் தீர்ப்பை எதிர்த்து பத்மனாபபரம் சார்பு நீதிமன்றத்திலும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையிலும் மேல்முறையீட்டு வழக்குகள் தாக்கல் செய்து நடத்தப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமன செய்ய மனு செய்து அதன் அடிப்படையில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டாரா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் உள்ள நீதிமன்ற ஆணையரும் அசல் வழக்கு எண்.142/2007 ல் உள்ள தீர்ப்பாணையின் படி உள்ள ஒன்பதாவது கண்டத்தை தனியாக காண்பித்துள்ளார் என்றால் சரிதான்.

7. வழக்குரையில் 13.400 சென்ட் சொத்தாக வழக்கு பட்டிகை சொத்தை காண்பித்துள்ள சொத்தானது 316 சதுர லிங்ஸ் வழிப்பாதையையும் சேர்த்து தான் காண்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு வழிப்பாதையும் சேர்த்து என் சொத்ததாக இந்த வழக்கில் கோரியுள்ளதால் தான் பிளாட் எண்.9 ஐ பற்றி எவ்வித குறிப்பும் என்னுடைய வழக்குரையில் மற்றும் முதல் விசாரணையில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. பிளாட் எண்.9 ஐ அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் இதற்கு முன்பு நடந்த வழக்குகளை பற்றி எவ்வித குறிப்பும்

வழக்குரையில் மற்றும் முதல் விசாரணையில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

8. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்ட SA (MD)No.527/2015 என்ற மேல்முறையீட்டில் பிளாட் எண்.8 மற்றும் 9 பொது வழிப்பாதையாகவும் அனைத்து கட்சிகளுக்கும் பொதுவாக உரிமைப்பட்டது என்று மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் உண்மையை மறைத்து ஏற்கெனவே தீர்வு காணப்பட்ட வழக்கு பட்டிகை சொத்தை பொறுத்து மீண்டும் மேல்முறையீடுகளை மறைத்து வழிப்பாதை எனக்கு உரிமைப்பட்ட சொத்தாக காண்பித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல, செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.